## குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறை

## பத்திரிக்கைச் செய்தி

தஞ்சாவூர் மாவட்டத்தில் குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறையின்கீழ் இளைஞர் நீதிக்குழுமத்திற்கு கூடுதல் பணியிடங்களான உதவியாளர் மற்றும் அமர்வு எழுத்தர்–1, இளநிலை உதவியாளர் உடன் இணைந்த பதிவேடு எழுத்தர்–1, அலுவலக உதவியாளர்–1 ஆகிய பணியிடங்களுக்கு முற்றிலும் தற்காலிகமாக தொகுப்பூதிய அடிப்படையில் பணிபுரிய தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன்.

| எ | பணியிடம் | கல்வி மற்றும் இதர தகுதிகள் | தொகுப்பூதியம் (ஒரு மாதத்திற்கு) |
|---|---|---|---|
| 1 | உதவியாளர் மற்றும் அமர்வு எழுத்தர் (1) | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில், 10+2+3 அல்லது 11+1+3 என்ற கல்வி முறையில் அறிவியல், கலை, வணிகவியல், பொறியியல், மருத்துவம் அல்லது வேறு ஏதேனும் ஒரு துறையில் பெறப்பட்ட இளங்கலைப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.<br><br>உதவியாளர்' (Assistant) பணிக்கு நேரடி நியமனம் செய்யப்படும்போது, தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தால் (Directorate of Technical Education) நடத்தப்படும் 'Computer on Office Automation' பயிற்சியில் தேர்ச்சி பெற்றவர்களுக்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் கணினி தொடர்பான பட்டயம் (Diploma) அல்லது பட்டப்படிப்பு (Degree) முடித்தவர்களுக்கோ முன்னுரிமை அளிக்கப்படும்.<br><br>**(42 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும்)** | ரூ. 25,000/- |
| 2 | இளநிலை உதவியாளர் உடன் இணைந்த பதிவேடு எழுத்தர் (1) | மாநில அல்லது மத்திய வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட SSLC (10–ஆம் வகுப்பு) பொதுத் தேர்வு அல்லது அதற்கு இணையான தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.<br><br>கணினித் திறன் பெற்றிருக்க வேண்டும்.<br>**(42 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும்)** | ரூ. 20,000/- |
| 3 | அலுவலக உதவியாளர் (1) | அரசு அல்லது தனியார் பள்ளி வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளியில் எட்டாம் வகுப்பு (VIII) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.<br><br>**(42 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும்)** | ரூ. 13,000/- |

**நிபந்தனைகள் :**

1. மேற்கண்ட பணியிடம் முற்றிலும் தற்காலிகமானது.
2. மேற்கண்ட பணியிடத்திற்கு பணியமர்த்தப்படும் பணியாளர் நிர்வாக காரணங்களுக்காக எவ்வித முன்னறிவிப்புமின்றி பணி நீக்கம் செய்திட நிர்வாகத்திற்கு அதிகாரம் உள்ளது.
3. மேற்காணும் பணியிடத்திலிருந்து பணி நீக்கம் செய்யப்படும் பட்சத்தில் அப்பணிக்கான எவ்வித உரிமை கோரலையும் பணியாளர் கொண்டிருக்க மாட்டார் என தெரிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட பணியிடத்திற்கு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் சுய சான்றொப்பமிடப்பட்ட கல்வி சான்றிதழ் நகல்கள் இணைத்து விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய கடைசி நாள் 30.09.2026 அன்று மாலை 5.00க்குள் கீழ்க்கண்ட முகவரியில் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ சமர்ப்பிக்க வேண்டும். தாமதமாக பெறப்படும் விண்ணப்பங்களோ அல்லது முழுமையாக பூர்த்தி செய்யப்படாமலோ அல்லது முறையான ஆவணங்கள் இணைக்கப்படாமல் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி :**

மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர்,
மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு,
அரசினர் குழந்தைகள் இல்ல வளாகம்,
வ.உ.சி. நகர், தஞ்சாவூர்–613 007.
தொலைபேசி எண் 04362–273014.

**மாவட்ட ஆட்சியர்,**
**தஞ்சாவூர்.**

# FORMAT

Application Form for the post of: ____________________

Pass-port size photograph of the applicant to be affixed

| | | | |
|---|---|---|---|
| 1. | Name of the Applicant | : | |
| 2. | Name of the Father/Husband | : | |
| 3. | Date of Birth | : | |
| 4. | Age as on 01.09.2026 | : | |
| 5. | Gender | : | |
| 6. | Native District | : | |
| 7. | Marital Status | : | |
| 8. | Address for Communication | : | |
| 9. | Phone Number | : | |
| 10. | Educational Qualification | : | |
| 11. | Additional Qualification | : | |
| 12. | Religion and Community | : | |
| 13. | Details of Working Experience | : | |
| 14. | If physically disabled mention the disability | : | |
| 15. | In case of widow/divorce/deserted wife/destitute/ex-student of home (please mention the category) | : | |
| 16. | Criminal Case Registered (If Yes, Please) | : | |

Signature of the Applicant